குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, அரியலூர்

STC .No. 1025/2023

2024 – ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24–ம் தேதி செவ்வாய்கிழமை ம.சா. – வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் படி) திருமதி. R.புவனேஸ்வரி M.C. அவர்களால் உறுதி மொழி செய்விக்கப்படுகிறது.

ம. சா. : 1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முத்துவேல் | தொழில் | : ஓட்டுநர் |
| த/பெ. | : பிச்சைபிள்ளை | வட்டம் | : அரியலூர் |
| கிராமம் | : க. பொய்யூர் | வயது | : 40 |

24.12.2024

(எதிரி ஆஜர் )

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

எதிரிக்கு எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்று என் புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரி கொடுத்த பதில் அறிவிப்பை நான் குறிப்பாக புகாரில் மறுக்கவில்லை என்றால் பதில் அறிவிப்பில் எதிரி குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என்று குறிப்பிட்டுள்ளேன். தனித்தனியாக மறுக்கவில்லை. எதிரிக்கு எந்த தேதியில் காசோலையில் குறிப்பிட்டுள்ள பணத்தை கொடுத்துள்ளேன் என்று சத்தியபிரமாணவாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் மார்ச் முதல் வாரம் 2023–ம் வருடம் என்று குறிப்பிட்டுள்ளேன். 2023 ம் வருடம் மார்ச் முதல் வாரம் எதிரி பணம் கேட்டார் என்றுதான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் அப்போதுதான் பணத்தை கொடுத்தேன் என்று குறிப்பிட்டுள்ளேன். எனது புகாரில் எதிரி காசோலை கொடுத்ததாகவும் 27.06.2023 அன்று வசூலுக்காக தாக்கல் செய்யும் பட்சத்தில் பணம் இருக்கும் என்று உத்தரவாதம் அளித்திருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். காசோலையை 27.06.2023 அன்று நான் தாக்கல் செய்யவில்லை என்றால் 28.06.2023 அன்றுதான் தாக்கல் செய்தேன். ரூ. 6,00,000/– பணம் கொடுத்ததற்கு காசோலையை தவிர வேறு எதுவும் ரசீது வாங்கவில்லை என்றால்

சரிதான். எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பில் ரூ. 3,00,000/– மட்டும்தான் கடன் வாங்கியதாகவும் அதில் ரூ. 1,20,000/– திருப்பி கொடுத்துவிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். மீதமுள்ள ரூ. 1,80,000/– பணத்தை அவர் தர தயாராக இருந்தார் என்று அந்த பதில் அறிவிப்பில் குறிப்பிட்டிருந்தார் என்றால் சரிதான். ரூ. 3,00,000/–த்திற்கு பதிலாக ரூ. 6,00,000/– கேட்டதாகவும் பணம் தரவில்லை என்று அந்த பதில் அறிவிப்பில் குறிப்பிட்டிருந்தார் என்றால் பொய்யாக அவ்வாறு சொல்லியிருந்தார். நான் ரூ. 6,00,000 பணம் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் ரூ. 3,00,000 பணம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் பணம் கொடுத்தபிறகு எதிரி எனக்கு ஏதாவது பணம் கொடுத்தாரா என்றால் எனக்கு 2 முறை ஜிபே மூலமாக தலா ரூ. 10,000/– அனுப்பியிருந்தார். ரூ. 3,00,000/– பணத்தை 2022–ம் ஜீன்மாதம் எதிரி என்னிடம் வாங்கினார் என்றால் 2023 மார்ச் முதல் வாரம் ரூ. 6,00,000/– பணம் நான் கொடுத்த பிறகு எனக்கும் எதிரிக்கும் ஜிபே மூலமாக 2 முறை ரூ. 10,000/– எதிரி அனுப்பியதை தவிர வேறு எந்த வரவு செலவும் இல்லை. அதற்கு முன்பு நாங்கள் ரூ,10,000/–, ரூ.20,000/– கொடுத்து வாங்கிகொள்வோம். லட்சகணக்கில் வரவு செலவு இருந்ததில்லை. 9566101807 என்பது என்னுடைய ஜிபே செல்போன் நம்பர் என்றால் சரிதான். 21.07.2022 முதல் 13.08.2024 வரை பல்வேறு தேதிகளில் எதிரி எனக்கு பணத்தை செலுத்தியுள்ளார் என்றால் இல்லை. எதிரி கடையில் வேலை செய்யும் சக்திவேல் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. எதிரி வாங்கிய ரூ. 3,00,000/– கடனுக்கு எதிரி கடையில் வேலை செய்யும் சக்திவேல் என்பவர் மூலமாக போன் பேயில் 12.11.2022 அன்று ரூ. 6000/–. 06.12.2022 அன்று ரூ. 2000/–செலுத்தியுள்ளார் என்றால் இல்லை. எதிரி எனக்கு ஜிபே மூலமாக பணம் அனுப்பி ரொக்கமாக என்னை கொடுக்க சொல்வார் அது போல் பலமுறை அனுப்பி நான் எடுத்துக்கொடுத்துள்ளேன். எதிரி எனக்கு ஜிபே மூலமாக அனுப்பி ரொக்கமாக வாங்கிகொள்வார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு ஜிபே மூலமாக அனுப்பிய தொகை ரூ. 1,20,000 என்றால் அந்த பணம் நான் ரூ.

6,00,000/– கொடுப்பதற்கு முன்பாக அனுப்பியது. அதை நான் அவரிடம் கொடுத்துவிட்டேன். நான் கடன் கொடுத்தபிறகு அவர் எதுவும் அனுப்பவில்லை. சக்திவேலை எதிரி தரப்பு சாட்சியாக விசாரிப்பதற்கு எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. எதிரி எனக்கு ஜிபே மூலமாக அனுப்பிய தொகை ரூ. 1,20,000 அந்த பணம் நான் ரூ. 6,00,000/– கொடுப்பதற்கு முன்பாக அனுப்பியது. அதை நான் அவரிடம் கொடுத்துவிட்டேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எதிரிக்கும் எனக்கும் வரவு செலவு இல்லை என்றாலும் இதுநாள் வரை எதிரியின் வங்கி கணக்கிற்கும் நான் எந்த பணமும் அனுப்பவில்லை என்றால் நான் அனுப்பியுள்ளேன் அதற்கு ஆதாரம் உள்ளது. காசோலையில் எதிரியின் கையொப்பம் எழுதப்பட்ட பேனா மையிற்கும் புகார்தாரரின் பெயர் மற்றும் தொகை விபரம், தேதி எழுதிய பேனா மையிற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் எதிரிதான் எழுதிகொடுத்தார் அவரிடம்தான் கேட்கவேண்டும். அக்கவுன்ட் நம்பவரும் வேறு ஒரு பேனா மையினால் எழுதப்பட்டிருக்கிறது என்றால் எதிரிதான் எழுதிகொடுத்தார் அவரிடம்தான் கேட்கவேண்டும். எதிரி ரூ. 3,00,000/– பணம் வாங்கும்போது இந்த வழக்கில் உள்ள காசோலையும் மற்றும் காசோலை எண்.676635 மற்றும் காசோலை எண் தெரியாத காசோலையும் அவர் வாங்கிய ரூ. 3,00,000/–த்திற்கு பிணையமாக கொடுத்தார் என்றால் கொடுக்கவில்லை. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட காசோலை சிறப்பு குறுக்கு கோடிட்ட காசோலை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. எதிரி வாங்கியது ரூ. 3,00,000/–ம்தான் ஆனால் எதிரி பிணையமாக கொடுத்த காசைோலையில் எதிரிக்கு தெரியாமல் ஏதோ எனக்கு ரூ. 6,00,000/– தரவேண்டியதுபோல் வசூலுக்காக தாக்கல் செய்து இந்த வழக்கை உண்மைக்கு புறம்பாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காசோலை கொடுத்தது ரூ. 3,00,000/– அதிலும் ரூ. 1,20,000/– திரும்பி கொடுத்துவிட்டார் என்றாலும் சரியல்ல. நான் ரூ. 3,00,000/–த்திற்குதான் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கவேண்டும் என்றால் சரியல்ல. அதில் ரூ. 1,20,000/– த்தை

கழித்துக்கொண்டுதான் தாக்கல் செய்திருக்கவேண்டும் என்றால் சரியல்ல. எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பிலும் இந்த பணத்தை கழித்து கொண்டு பாக்கி தொகைக்குதான் அனுப்பியிருக்கவேண்டும் என்றால் சரியல்ல. எதிரி செலுத்திய தொகையை கழிக்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ளது சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல. நான் அதிக தொகைபோட்டு காசோலை தாக்கல் செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் அந்த காசோலையில் கண்ட தொகை சட்டப்படி நிறைவேற்றி பெறக்கூடிய கடன் தொகையில்லை என்றால் சரியல்ல. எதிரி எனக்கு ஜிபே மூலமும், சக்திவேல் மூலமாகவும் அனுப்பிய தொகை எதிரி என்னிடம் ரூ. 3,00,000 வாங்கிய தேதியிலிருந்து இந்த வழக்கு தாக்கல் செய்த தேதிக்கு இடைப்பட்ட காலத்தில் செலுத்தப்பட்டது என்றால் சரியல்ல. இந்த காசோலைபடி எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்றாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்றாலும் சரியல்ல. அறிவிப்பில் கேட்டுள்ள கடன் தொகை சட்டப்படி நிறைவேற்றப்படகூடிய கடன் தொகை விபரங்களை பிரதிபலிக்கவில்லை என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u> – இல்லை.

(ஒம்) திருமதி.R.சங்கீதா சேகர்,
நீதித்துறை நடுவர் எண்–I,
அரியலூர்.